## THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

**MCOP.No.62/2019**

Deposition of PW3 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in MCOP Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 24.04.2024

Evidence Recorded Time: 03.25 P.M to 03.35 P.M

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | அழகரசன் | **Caste** | : | |
| **S/o & W/o.** | : | நடராஜன் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**முதல் விசாரணை:-**

நான் கோகுலம் சிறப்பு மருத்துவமனையில் பில் செக்சனில் கேசியராக வேலை பார்க்கிறேன். நீதிமன்றத்தில் இருந்து எனக்கு அழைப்பாணை வந்தது. இந்த வழக்கு சம்மந்தமாக சாட்சி சொல்ல அங்கீகார கடிதம் எங்கள் மருத்துவமனையில் கடிதம் கொடுத்துள்ளார்களா என்றால் கொடுத்துள்ளார்கள். அது ம.சா.ஆ.1 ஆகும்.அந்த அழைப்பாணையில் கண்டபடி ராமலிங்கம் என்பவர் எங்கள் மருத்துவமனையில் 22.04.2019 ல் அனுமதிக்கப்பட்டு 23.04.2019 அன்று விடுவிக்கப்பட்டார். விபத்து ஏற்பட்டது என்றும் அது சம்மந்தமாக சிகிச்சை எடுக்க வந்தார். அவருக்கு மருத்துவமனையில் அனுமதித்து அவருக்கு கொடுக்கப்பட்ட மருத்துவ சிகிச்சை சம்மந்தமாக பில்களை இத்துடன் சமர்ப்பிக்கிறேன். அதன் அசல் மனுதாரர் வசம் உள்ளது. நான் ஆஜர்படுத்தும் ஆவணங்கள் எங்கள் மருத்துவமனையில் பராமரிக்கப்படும் பதிவேட்டில் இருந்து எடுத்து வந்தது ஆகும். மேற்படி ஆவணம் ம.சா.ஆ.2 ஆகும். அசல் தாக்கல் செய்யப்படாததால் 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டதன் பேரில் ஆட்சேபணையின் பேரில் குறியீடு செய்யப்பட்டது.

3-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை -

நான் கோகுலம் மருத்துவமனையில் பில்லிங் செக்சனில் வேலை பார்க்கிறேன்.

நான் நிர்வாக அதிகாரி இல்லை என்றால் சரிதான்.எனக்கு அழைப்பாணை வந்ததா என்றால் வந்தது. அழைப்பாணையானது நிர்வாக அதிகாரிக்கு தான் வந்தது என்றால் சரிதான். எனக்கு கொடுத்த அழைப்பாணையில் ஆஸ்பிட்டல் பில், டிரீட்மெண்ட் சம்மரி ஆகியவை கொண்டு வர சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். நான் ட்ரீட்மெண்ட் சம்மரி மட்டும் எடுத்து வந்துள்ளேன். அதன் அசல் மருத்துவ பில்களை யார் எப்போது வாங்கினார்கள் என்பது தெரியுமா என்றால் தெரியாது. பில் சம்மந்தமாக யார் பணம் கட்டிணார்கள் என்பது தெரியுமா என்றால் தெரியாது. உண்மை நகல் போடச்சொல்லி யார் சொன்னார்கள் என்றால் அசல் தொலைந்து விட்டது என்று மனுதாரர் தரப்பில் தெரிவித்ததால் உண்மை நகல் போட்டோம். அசல் பில்களுக்கான தொகையை மனுதாரர் வாங்கிக் கொண்டார் என்றும் நான் அவருக்கு உதவி செய்யும் நோக்கத்தில் அவருக்கு ஆதரவாக உண்மை நகலை கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/—அழகரசன்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/—எஸ்.முத்துராமன்
சார்பு நீதிபதி, மேட்டுர்.